بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON
## வெள்ளிக்கிழமை குத்து:பா 27-04-2012

# *TIME IS PRECIOUS*

# நேரம் விலை வாய்ந்தது

Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் சலாம் தெரிவித்தபிறகு தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் சூரா:ஃபாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

நேரத்தை பொறுத்தவரை எந்த ஒரு மனிதனுக்கும் தனிப்பட்ட முறையில் சிறப்பு எதுவும் இல்லை. எல்லா மனிதர்களுக்கும் நேரத்தை பகுத்து வழங்கப்பட்டிருக்கின்றது. சிலர் நேரத்தை சரியான முறையில் கையாண்டு அதன் வாயிலாக அதிகம் நன்மைப்பெறவும் செய்கின்றன. உயர்ந்தவனும் தூயவனுமான அல்லாஹ் நேரத்தை மதிப்பிட்டு தனது பக்தர்களுக்கு வழங்கியிருக்கின்றான். அதாவது சில நேரங்கள் மற்று சிலநேரங்களை விட சிறப்பு வாய்ந்ததென்றும் அதை பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

மதசார்பான வேலைகளின் விஷயத்தில் தூயவனான இறைவன் சில தனிப்பட்ட நேரங்களை அதிக அருள் நிறைந்ததாக ஆக்கியுள்ளான். எடுத்துக்காட்டாக **'ரமலான்'** மாதத்தில் துல்ஹஜ்ஜின் முதல் பத்து தினங்கள் போன்றவை. அதுபோலவே பிரார்த்தனைகள் நிறைவேறுவதற்குள்ள நேரங்கள். அதாவது ஒவ்வொரு நாளின் இரவின் இறுதியான 1 / 3 நேரம், எல்லா வெள்ளிக்கிழமை மத்தியத்திற்கு பின் வரும் நேரம், நோன்பு வைக்கின்றவர் அதை முறிக்கின்ற நேரம், ரமலான் மாதத்தின் தூய இரவு என்பவையாகும்.

ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் விடியற்காலையிலும் உங்கள் தூய்மையான உள்ளத்தை அவன் பக்கம் உயர்த்தி இம்மைக்காகவும், மறுமைக்காகவும் அருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். இறைவன் சன்னிதியில் அனைத்தையும் சமர்ப்பிபதற்கான வாய்ப்புகள் உங்கள் முன்னிலையில் அதிகமாக காணப்படுகின்றது. பகலும் இரவிலும் தியானத்தில் மூழ்கியிருங்கள். தியாகங்கள் அர்ப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் உங்களுக்கு திருமறையின் வாயிலாகவும் தூதர் மன்னன் நபி(ஸல்) போதனைகளின் வாயிலாகவும் அதிகம் கிடைக்கின்றது. ஆகையால் இறைவனை நினைவு கூறுகின்றோர்களிடம் இணைந்திருக்க முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வை மட்டுமே அழைத்து பிரார்த்தனை செய்யுங்கள். இறை செயல்கள் செய்கின்றோர்களோடு அல்லாமல் நன்றி கெட்டவர்களோடும் சோம்பேறிகளோடும் சேர்ந்திருக்க வேண்டாம். உங்களின் நேரங்களை நற்செயல்களின் வாயிலாக ரசியுங்கள். நேரம் ஒரு வாள்போன்றதேயாகும். பிறகு செய்யலாம் என்று எண்ணினால் அது பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தும். வாள்போன்று அபாயம் நிறைந்தது மற்றொன்றில்லை. அதனால் அவ்வாளைப் போல் நேரத்தை கவனமாக கையாள வேண்டும். பூமியில் செயல்களின்

நிலைப்பற்றி சிந்தித்தால் மனிதனின் இவ்வுலக வாழ்வுக்கும் அதன் மேன்மைக்கும் முயற்சிகள் மிக அவசியமென புரிந்துக்கொள்ளலாம். அவர்களின் வாழ்வின் விருப்பத்திற்கும் வெற்றிக்கும் முக்கியமாக இறைவன் நிச்சயித்திருப்பது, நேரத்தை கணித்து அதற்கு முன்பாக செய்கின்ற செயல்களாகும். இறைதூதர் ஹஸ்ரத் முஹமது(ஸல்) அருளினார். **“அல்லாஹ்வே காலம் தென்படுவதற்கு முன் என் பிரார்த்தனை அதாவது என் சமுதாயத்திற்கு வேண்டியுள்ள என் பிரார்த்தனை நீ அவர்களுக்கு அருள்புரிந்து நிம்மதி வழங்குவாயாக என்பதாகும்”**. ஆகையால் ஒவ்வொரு முஸ்லீமும் காலம் வந்து சேருவதற்கு முன் இப்பிரார்த்தனையைக் கண்டு கொள்ளவும், அவர்களில் நின்று அதிக முயற்சிகள் தேவையாக இருக்கின்றது. காரணம் அது அவர்களுடைய வாழ்விற்கும் மரணத்திற்கும் பலன் விளைவிக்கின்றதாக மாறுகின்ற அளவிற்கு அவர்களை ஆயத்தமாக்குவதற்கேயாகும்.

நேரத்தை எவ்வாறு செலவிட வேண்டுமென்று ஒவ்வொரு முஸ்லீமும் நிச்சயமாக திட்டப்படுத்த வேண்டும். காரணம் நேரத்தை நல்ல நிலையில் பயனுள்ள வகையில் செலவு செய்வதும் திட்டங்கள் வகுப்பதும் மிக அவசியமாகும். கடந்த கால மகான்கள் நேரத்தின் மதிப்பை குறித்து நன்கு அறிவுடையவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் அபுபக்கர் சிந்திக் (ர) இறப்பின் கட்டத்தில் ஆயிருந்தபோது அவர் ஹஸ்ரத் உமர்(ர)வை கலீஃபா பதவியில் கண்டுக்கொண்டு கீழ்வரும் அறிவுரைகள் வழங்கியிருந்தார்.

**அல்லாஹ்வுக்கு பகல் நேரங்களில் சில உரிமைகள் உண்டு. அதை அவன் இரவு வேளைகளில் ஏற்றுக்கொள்வதில்லை. அதைபோல், அல்லாஹ்வுக்கு இரவு நேரங்களில் சில உரிமைகள் உண்டு அதை அவன் பகல் வேளைகளில் ஏற்றுக்கொள்வதில்லை. எவர் ஒருவர் தங்களுக்கு வழங்கப்பட்ட தூய்மையான பொறுப்புகளை முழுமைப்படுத்துகிறாரோ அவர்களில் நின்று உன்னதமான செயல்களை மட்டுமே அவன் ஏற்றுக்கொள்கின்றான்”.**

ஹஸ்ரத் அபுபக்கர் (ர) அவர்கள், ஹஸ்ரத் உமர்(ர)வின் காதுகளில் இறுதியாக கொடுத்த உபதேசம், அவருக்குப்பின் கிலாஃபத் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான ஒளி அதுவாகவே இருந்தது. ஆகையால் உமர் (ர) தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் நேரத்தை பகுத்து அதன்படி செயல்பட்டிருந்தார். முக்கியத்துவத்தின் பட்டியல்படி வேலைகளை பகுத்து அதை முழுமைப்படுத்துவதில் காலம் தவறாமல் கடைப்பிடிப்பதற்கும், குறிப்பிட்ட நேரத்தில் ஏற்றுக்கொண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கும், அது உதவுபுரிந்தது. கட்டாயமாக்கப்பட்ட செயல்களை (பர்ளான) முதல் செய்யவும். அதற்கு பின் கட்டாயமல்லாத புண்ணிய செயல்களில் (சுன்னத்தான) ஏற்படவும் வேண்டும். மற்று விஷயங்களிலும் (பௌதீகமான) இம்முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

அபுபக்கர் (ர) தங்களின் மரணத்திற்கு சற்று முன் தனது முஸ்லீம் சகோதரர்களுக்கு வழங்கி நற்செய்தி இதுவாகும். அதாவது உங்களின் விலைவாய்ந்த நேரத்தை சிறந்த நிலையில் கையாள வேண்டும். காலத்தின் முக்கியத்துவவும் அதை உபயோகப்படுத்துவதன் அவசியத்தையும் அவர் சிறந்த முறையில் புரிந்திருந்தார். அதன் காரணமாகவே தனது இறுதிவிருப்பம் என்ற நிலையில் நேரத்தை அதற்கு உகந்த முறையில் உபயோகப்படுத்த அவர் முஸ்லீம் சமூகத்தை அறிவுறுத்தியது. இது மிக விலை உயர்ந்த ஒரு கட்டமாகும். இதை நாம்

ஒரு வார்த்தையில் இவ்வாறு உரைக்கலாம்.

மனிதன் எதாவது ஒரு செயலை எப்போதாவது செய்து முடிப்பதில் எவ்வித சிறப்புமில்லை. ஆனால் உயரிய ஒரு செயலை அதற்கு உகந்த முறையில் செய்து முடிப்பதே மேன்மை.

குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைகளை செய்வதையும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதையும் இஸ்லாம் ஊக்குவிக்கின்றது. அல்லாஹ் நம்பிக்கையாளர்களை இவ்வாறு வாழ்த்துகின்றான்.

**“அவர் தங்களிடம் நம்பி ஒப்படைத்த பொருளை பாதுகாப்பவர்களும் தங்களின் வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களும் ஆவார்கள்”.**

ஹஸ்ரத் மூஸா (அ) மைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்.

**அப்படி நீ வந்தாய் ஏய் மூஸா குறிப்பிட்ட விதியின்படியுள்ள நேரம்.**

அதாவது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலைகளுக்காக வந்து சேர்ந்தீர்கள் என்று பொருள். இவ்வசனத்தின் அர்த்தம், குறிப்பிட்ட நேரத்தில் நீர் வந்திருக்கின்றார். அதாவது பறோவின் அருகில் ஒரு தூதராக நான் விரும்பிய நேரத்தில் நீர் வந்தீர்.

வாக்குறுதிகளை மீறுவதைக் குறித்து நபி(ஸல்) முன் அறிவிப்புகள் வழங்கியிருக்கின்றார். வாக்குறுதிகளை மீறுவது நயவஞ்சகத்தின் அடையாளமாக கருதப்படுகின்றது. நபி(ஸல்) கூறுகின்றார் நயவஞ்சகர்களின் அடையாளம் மூன்று வகைப்படும்.

(1) பேசும் போது பொய் உரைப்பது

(2) வாக்குறுதிகளை மீறுவது

(3) நம்பினால் ஏமாற்றுவது.

மற்றுள்ளவர்களுமாக சம்மந்தப்பட்ட இவ்விஷயங்களில் நம்பிக்கை செலுத்தாத காரணம் அவர்களை தண்டிப்பதாகும். அதுமூலமாக அவர்களின் விலைவாய்ந்த நேரம் வீணாகின்றது. நம்பிக்கைக் கொண்டதன் பெயரில் மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற நேர இழப்பை இவர்கள் சற்றும் உணர்ந்துகொள்வதில்லை.

நேரத்தை வீணாக்குவதற்கு எதிரில் இஸ்லாம் முன் அறிவிப்பு வழங்கவும் ஒரு முஸ்லீமுடைய நேரத்தை பாதுகாப்பதற்கு இஸ்லாம் சில தத்துவங்களை வழங்கவும் செய்கின்றது.

ஒரு முஸ்லீம் மற்றொருவரை சந்திப்பதற்கு அனுமதி கேட்க வேண்டும். அனுமதியின்றி ஒரு முஸ்லீம் மற்றொருவருடைய வீட்டில் நுழைய அனுமதிப்பதில்லை. இது தொடர்பாக திருநபி(ஸல்) கூறுகின்றார்.

**“நீங்கள் மூன்று தடவை அனுமதி கோரவேண்டும். (வாசல் கதவில் மூன்று முறை முட்டவும்). அதன் பிறகு அவர் அனுமதி கொடுத்தால் உள்ளே நுழையவும். இல்லையென்றால் திரும்பி போகவும்”.**

அல்லாஹ் கூறுகின்றான்,

**“நம்பிக்கையாளர்களே உங்களுடையதல்லாத வீடுகளில் சலாம் கூறாமலும் அனுமதி கோராமலும் உள்ளே நுழையக்கூடாது. அதுவே உங்களுக்கு உத்தமமானது.”**

உங்களை நினைவுப்படுத்துகின்றேன். நீங்கள் எவரேனும் காண வீட்டில் உங்களுக்கு அனுமதி கிடைக்கும் வரையில் அங்கு நுழையக்கூடாது. உங்களோடு திரும்பிபோக கூறினால் திரும்பி போகவும். நீங்கள் திரும்பி போவதே உத்தமமாகும். நீங்கள் செய்கின்ற அனைத்து செயல்களை குறித்தும் அல்லாஹ் நன்கு அறிகின்றான். இந்த நடவடிக்கை செயல்கள் அனைத்தும் ஒரு முஸ்லீமுடைய நேரத்தை பாதுகாப்பதற்கும் நேரத்தை வீணடிக்காமல் இருப்பதற்குமாகும். தேவையற்ற சந்திப்பும் அனுமதியற்ற நேர்காணலும் நேரத்தை வீணாக்குவதாகும்.

விளையாட்டுகளுக்காக நேரத்தை செலவிடுவதும், நேரத்தை வீணாகுவதில் உட்படுகின்றது. நற்செயல்கள் செய்வதை மாற்றி வைத்தால் வாக்குறுதி மீறல் போன்றவை வேலைகள் செய்வதற்கு தடையாகயிருக்கும். அளவு கடந்த எதிர்பார்ப்பு சோம்பேறியாக பரிணமிக்கச் செய்கிறது. சோம்பல் நமது வேலைகளை தாமதப்படுத்துகின்றது. இது நம்மை விளையாட்டின் பக்கமாக திருப்புகின்றது.

ஏய் ஆதாமின் மக்களே பிறகு செய்யலாம் என்ற நிலையில் நின்று விலகிவிடுங்கள். ஏனென்றால் நீங்கள் வாழ்வது இன்று மட்டுமாகும். நாளை நீங்கள் வாழ்வதில்லை. ஆகையால், நீங்கள் நாளையைப்போல் எண்ணி இன்று செயல்படுங்கள். அப்படியானால் இன்று உங்களுக்கு கவலைப்பட தேவையில்லை. இவ்வுரையை முடிப்பதற்கு முன் ஒரேயொரு வார்த்தக் கூறுகின்றேன்.

**“ஒருவன் நேற்று அனுபவித்தது போன்று துன்பங்கள், கஷ்டங்கள் இன்று அனுபவித்தால் நேற்றையை விட இன்று அவனது வாழ்வு தீயதாகயிருந்தால் அவன் சாபத்திற்குரியவன்.”**

ஆகையால் எனது சகோதரிகளை புரிந்துக்கொள்ளுங்கள். **செயல்கள் செய்வதற்கான நேரம் பின்னோக்கி செல்கின்றது. அது ஒருபொழுதும் திரும்பி வருவதில்லை. இவ்வுலகம் செயல்களுக்கான இடமேயன்றி அது கணக்குகளுக்கான இடமல்ல. மறு உலகம் கணக்குகளுக்கான இடமேயன்றி அது செயலுக்கான இடமேயல்ல.**

அல்லாஹ் நமக்கு இந்த குத்துஃபாவை நல்ல நிலையில் புரிந்துக்கொள்வதற்கான அறிவும் ஆற்றலும் வழங்குவானாக. அத்துடன் வருகின்ற வெள்ளிக்கிழமை இவ்விஷயவுமாக தொடர்புடைய அதிகமான காரியங்கள் கூறுவதற்கான தௌபீக் வழங்குவானாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Issued by**
**Jamaat Ul Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

Proof Reader
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

Translated by
**Abdhul Sudeer**